# ஆண்டு மலர்

## 2024 - 2025

## அரசு கலைக்கல்லூரி

### திருச்சி - 22.






கல்லூரி கல்வி இயக்குனர் மற்றும்
கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள்



மகளிர் தினவிழா

# 2024 - 2025 ஆம் கல்வி ஆண்டில் ஓய்வு பெறும் பேராசிரியர்கள்



திருமதி. **து.பத்மாவதி**
உதவிப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை



முனைவர் **தே.இராஜன்**
உதவிப் பேராசிரியர்,
வணிகவியல் துறை



முனைவர் **பா.சுஜிபிருந்தா தியோடர்**
இணைப் பேராசிரியர்,
ஆங்கிலத்துறை



முனைவர் **ப.சாந்தினி**
இணைப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை




முத்தமிழ் விழா 28.03.2025




IQAC



இயற்பியல் துறை



முன்னாள் மாணவர் சங்கம்



நாட்டு நலப்பணித்திட்ட செயல்பாடுகள்




ஆங்கிலத் துறை



கணினி அறிவியல் துறை




பொதுநிர்வாகவியல் துறை




மின்னணுவியல் துறை



நுண்கலை மன்றம்




அரசியல் அறிவியல் துறை



கணிதவியல் துறை




வணிகவியல் துறை



வரலாற்றுத்துறை



காட்சித் தொடர்பியல் துறை




சமூகப்பணித் துறை




வணிக நிர்வாகவியல் மற்றும் கூட்டுறவியல் துறை




ஊடகவியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை




உளவியல் துறை



புவியியல் துறை




வேதியியல் துறை

# தமிழாய்வுத்துறை
# ஆண்டறிக்கை 2024-2025

தமிழ்த்துறையில் முத்தமிழ் விழாவானது 28.03.2025 அன்று நடைபெற்றது. விழாவின் சிறப்பு விருந்தினராக முனைவர் இரா.தமிழடியான் பங்கேற்று சிறப்பித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் மாணவர் தமிழ் மன்றம் சார்பில் ஜனவரி 29, 30, 31 ஆகிய நாட்களில் பேச்சு, கவிதை, கட்டுரை போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா பிப்ரவரி-14-2025 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக முனைவர் கலைமணி அவர்கள் பங்கேற்று மாணவர்களுக்கு பரிசளித்து சிறப்பு செய்தார்.

21.02.2025 அன்று உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்றைய சூழலில் தமிழர் நாகரிகமும் பண்பாடும் சிகரங்களே! சிரமங்களே! என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் நடுவராக முனைவர் மா. செங்குட்டுவன், அணித்தலைவராக முனைவர் ஆ. அங்கமுத்து ஆசிரியர் பங்கேற்றனர்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக முதுகலை தமிழ்ப்பாடத்திட்டக்குழு உறுப்பினராக முனைவர் வை. இராமன் முனைவர் தி.ஆறுமுகம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் 01.03.2025, 02.03.2025 ஆகிய இரண்டு நாட்கள் பஞ்சாப் மாநிலம் லூதியானா மாநகரில் நடைபெற்ற AIFUCTO EDUCATIONAL CONFERENCE -இல் இருவரும் கலந்து கொண்டனர்.

05.06.2024 அன்று தஞ்சைத் தமிழ் மன்றத்தின் சார்பில் 'கல்விச்செம்மல்' விருது முனைவர் தி. ஆறுமுகம் பெற்றார்.

அய்யன் திருவள்ளுவர் திருவுருவச்சிலை வெள்ளிவிழா சார்பாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலகத்தில் 26.12.2024 அன்று திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் முனைவர் பெ.பகவத்கீதா நடுவராகப் பங்கேற்றார். மற்றும் விநாடி வினா போட்டியிலும் நடுவராகப் பங்கேற்றார்.

ஸ்ரீ விக்னேஷ் வித்யாலயா பள்ளி நடத்திய மாநில அளவிலான கவிதைப்போட்டிக்கு முனைவர் ஆ.ஜாய்ஸ் ஜெயரூபி நடுவராகவும் பேச்சுப்போட்டிக்கு முனைவர் ப. வளர்மதி நடுவராகவும் பங்கேற்று சிறப்பித்தனர்.

விளையாட்டுப் போட்டிகளான ஓட்டப்போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு மாணவன் தி.கதிர்ச்செல்வன், இளங்கலை முதலாமாண்டு மாணவி ச.நித்ரா ஆகியோரும் கைப்பந்து போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு மாணவன் கோ. பூவரசன் முதலாமாண்டு மாணவன் வீ. சரவணக்குமார் ஆகியோரும் மட்டைப்பந்து போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு கோ. பூவரசன் ஆகியோர் பரிசுகளைப் பெற்றனர்.

# ஆங்கிலத்துறை
# ஆண்டறிக்கை 2024-2025

ஆங்கிலத் துறையில் Bridge Course முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு July 8 முதல் 12 வரை நடைபெற்றது. ஆங்கில இலக்கிய மன்றம் 11.09.2024முனைவர் S.சண்முக சுந்தரம் இணைப்பேராசியர் ராஜா சரபோஜி அரசு கலைக் கல்லூரி, தஞ்சாவூர்., Second Longuage Aquisition என்ற தலைப்பில் உரையாற்றினார். 26.02.25 அன்று, முனைவர். ப.சந்தோஷ்குமார் இணைப்பேராசிரியர், ஆங்கிலத்துறை கிருஷ்டி ஜெயந்தி கல்லூரி (தன்னாட்சி) பெங்களூர், Ink to Income The Carrier Bath for English Mayor என்ற தலைப்பில் உரையாற்றினார்.

14.02.2025 அன்று போதை தடுப்பு மன்றம் சார்பாக முனைவர், R தேவநாதன் கௌரவ விரிவுரையாளர், சமூகப்பணித்துறை அரசு கலைக் கல்லூரி, திருச்சி - 22, 'Dare to Say no to Drug' என்ற தலைப்பில் மாணவர்களின் போதை தடுப்புக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

முனைவர், P. David Livingstone இணைப்பேராசிரியர், முனைவர். P. Jayangeetha இணைப்பேராசிரியர், முனைவர்.S.Jeyanthi mala இணைப்பேராசிரியர் ஆகியோர் பாரதிதாசன் பல்கலைக் கழகம், ஆங்கிலத் துறையின் UG மற்றும் PG Bos தலைவர் மற்றும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

17.03.25 அன்று முனைவர்.N.S.Vijaya Lakshmi அரசு கலைக்கல்லூரி, ஸ்ரீரங்கம், திருச்சி ஆங்கிலத் துறையின் விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கு பெற்று On Literary Theories and Research தலைப்பில் சிறப்பு உரையாற்றினார் முனைவர்.N.Anathavalli முனைவர்.P.Davit Livingstone திருமதி B.Sevi திருமதி, V. RamaPriya முனைவர் P. Prema முனைவர். P.Pathmavathi முனைவர்.V.Chitra Devi மற்றும் Ph.D Scholars S.Janani ஆகியோர் பண்ணாட்டு கருத்தரங்கத்தில் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கினார்கள்.

மாநில அளவில் நடைபெற்ற தமிழ் கையெழுத்துப் போட்டியில் மாணவி M.ரூபா Ist MA English கலந்து கொண்டு முதல் பரிசும் மற்றும் பணத்தொகையும் பெற்றார்.

# வரலாற்றுத் துறை
# ஆண்டறிக்கை 2024 - 2025

வரலாற்றுத் துறை தலைவர் பேராசிரியர் முனைவர் P. மேரி லீமா ரோஸ் 5 மற்றும் 6 ஆகஸ்ட் 2024- நாட்களில் நடைபெற்ற 'Critical and creative thinking Skills என்ற தலைப்பில் Michael Job memorial College of Education for women Coimbatore நடத்திய இரண்டு நாள் FDP நிகழ்வில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றார்.

இணை பேராசிரியர் முனைவர் P.சாந்தினி புனித சிலுவை தன்னாட்சி கல்லூரியின் பாடதிட்டக் குழு உறுப்பினராக உள்ளார். மேலும் புனித வளனார் தன்னாட்சி கல்லூரியின் பாடதிட்ட குழு உறுப்பினாராக உள்ளார்.

இணை பேராசிரியர் முனைவர் G.K.மணி திருச்சிராப்பள்ளி தேசிய தன்னாட்சி கல்லூரியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று 'Beyond the books using history to crack the civil service Vering History Examination என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

முனைவர் T.கருப்பண்ணன், விழுப்புரம் Historical Roserch Centre நடத்திய ஒருநாள் தேசிய கருத்தரங்கில் கலந்துகொண்டு Meenakshi Sdundareswara Temple என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்பித்து சான்றிதழ் பெற்றார்.

முனைவர் V.சுப்புலட்சுமி 28-30 December 2024 பாட்டியாலா, பஞ்சாப் பல்கலைகழகம் நடத்திய Indian History congres கலந்து கொண்டு The Growth of Judiciary in Tiruchirappalli District under the colonial Rule (1801-1858) in Section III Mordern India என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

வரலாற்றுத் துறை IQAC-Anti-Dong Commitee இணைந்து நடத்திய சிறப்பு கூட்டமானது 6.2.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் 'போதையை தவிர், கல்வியால் நிமிர்' என்ற தலைப்பில் சமூக பணித்துறை கௌரவ விரிவுரையாளர் சு.சுவேதா அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற கல்லூரிகளுக்கிடையேயான நடைபெற்ற தரவரிசை தேர்வில் G.மணிகண்டன் முதலாவது இடத்தையும், S.பிரவின்குமார் 2வது இடத்தையும் பெற்றனர், மேலும் பாரதிதாசன் பல்கலைக்கழக தன்னாட்சி கல்லூரிகளுக்கிடையேயான தேர்வில் முதுகலை வரலாற்றுப் பிரிவில் G.மணிகண்டன் 18வது தரவரிசையை பெற்று வரலாற்றுத் துறைக்கும் நம் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

# வணிகவியல் துறை
# ஆண்டறிக்கை 2024 - 2025

வணிகவியல் மன்றக்கூட்டம் 17.03.2025 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் முனைவர் R. சுதா, இணைப்பேராசிரியர் வணிகவியல் துறை, தந்தைப் பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி-23. "Carrer Opportunities for Commerce Graduates" என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இறுதி ஆண்டும் பயிலும் மாணவர்கள் பயன் அடைந்தார்கள்.

01.04.2024 முதல் முனைவர். அ. செல்வேந்திரன் அவர்கள் நம் கல்லூரியின் நிதியாளர் பொறுப்பு வகித்து வருகிறார்.

மன்னர் சரபோஜி அரசு கலைக் கல்லூரி, (தன்னாடசி) தஞ்சாவூர், ஆடவர் அரசு கலைக் கல்லூரி,(தன்னாட்சி) கும்பகோணம், மற்றும் பிஷப்ஹீபர் கல்லூரி (தன்னாட்சி) திருச்சி ஆகிய மூன்று கல்லூரிகளில் பாடத் திட்ட வல்லுநர் குழுவாக முனைவர். அ. செல்வேந்திரன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் இளநிலை மற்றும் முதுநிலை பாடத்திட்டக் குழு வல்லுநராக (BOS)முனைவர் வெ. செல்வராணி, முனைவர் ந. சாரதா நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

புதுக்கோட்டை, மாட்சிமைபொருந்திய மன்னர் கல்லூரியின் கல்வித் தணிக்கை குழு. Academic Audit உறுப்பினராக முனைவர் வெ.செல்வராணி 12.03.2025 புதுக்கோட்டை, மாட்சிமைபொருந்திய மன்னர் கல்லூரி வணிகவியல் துறையில் நடைபெற்றப் பாடத்திட்ட ஆய்வு குழுவில் பாரதிதாசன் பல்கலைக்கழக பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினராக முனைவர் வ. ஜெயசங்கர் கலந்து கொண்டார்

பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் 01.03.2025 மற்றும் 02.03.2025-ல் நடைபெற்ற XXIII AIFUCTO Conference-ல் முனைவர் வெ. செல்வராணி, கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள 120 கல்லூரிகளில் 10 கல்லூரிகள் தேர்வுச் செய்யப்பட்டு, அதில் நமது கல்லூரி வணிகவியல் துறை மாணவர்கள் திரு. சரண்,
திரு.முருகேசன், திரு.பரணிதரன், திரு.ஈஸ்வரன், மற்றும் திரு. சகாயராஜ் தேர்வாகி NSE அகடாமியால் தஞ்சாவூரில் நடத்திய வினாடி வினா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஐந்தாம் இடத்தைப் பெற்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாரதிதாசன் பல்கலைகழக நூலகத்தில் 07.02.2025 மற்றும் 08.02.2025 -ல் Builing Sustainable Libraries for Connecting Communities Librarianship Technology and Collabration என்ற தலைப்பில் நடைபெற்றப் பன்னாட்டு கருத்தரங்கில் திருமதி. R. ஆண்டாள் அவர்கள் கலந்து கொண்டு இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தார்.

# வணிக நிர்வாகவியல் மற்றும் பன்னாட்டு வாணிப துறை
# ஆண்டறிக்கை 2024 - 25

வணிக நிர்வாகவியல் துறை, பன்னாட்டு வாணிபம் 'துறை மற்றும் கூட்டுறவு துறை. உள் தர உறுதிப் பிரிவுடன் IQAC இணைந்து, ஜூலை 15, 2024 அன்று தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வி.ரங்கராஜன் தலைமையில் சிறப்புச் சொற்பொழிவை ஏற்பாடு செய்தது. இந்த அமர்வு வெற்றியை அடைவதற்கான நேரடியான அணுகுமுறைகளை எடுத்துக்காட்டியது, மாற்றத்தைத் தழுவுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது மற்றும் தள்ளிப்போடுவதைத் தவிர்க்கிறது. சுமார் 200 மாணவர்கள் மற்றும் 15 ஆசிரியர்கள் விரிவுரையின் மூலம் பயனடைந்தனர்.

ஜூலை 4 முதல் ஜூலை 10, 2024 வரை, புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கான . ஏழு நாள் புது முகம் புத்தாக்க நிகழ்ச்சி நடைபெற்றது. மனோதத்துவ நிபுணர் திருமதி. டி. டெல்சியா டீன் டெபோராவின் மன அழுத்த மேலாண்மைக் குறித்த நிகழ்ச்சி தொடங்கியது. கூடுதலாக, வெற்றிகரமான வாழ்க்கையை உருவாக்குதல், திறமை மேலாண்மை மற்றும் விளையாட்டுப் பற்றிய விழிப்புணர்வு, என்சிசி மற்றும் என்எஸ்எஸ் பற்றிய விரிவுரைகள் வழங்கப்பட்டன. திருச்சி வெஸ்ட்ரி பள்ளி மைதானத்தில் திருச்சி புத்தகத் திருவிழா 27.09.2024 முதல் 06.10.2024 வரை நடைபெற்றது. பள்ளிக் குழந்தைகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 19.09.2024 அன்று (வியாழக்கிழமை) 'திருச்சியே பேசு' என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நாளில் காலை 11 மணி முதல் 12 மணி முடிய வணிக நிர்வாகவியல் துறை வகுப்பறையில் மாணவி க. ஜெயசுதா புத்தகத்தை வாசித்தார்.

பிப்ரவரி 7. 2025 அன்று, ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல் மற்றும் பொருள் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் என்ற போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வுத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு கிட்டத்தட்ட 100 மாணவர்கள் பயனடைந்தனர். மேலும், திருச்சி அரியமங்கலத்தில் உள்ள Reliance Super Market-ல் III BBA வில் இருந்து 14 மாணவர்கள் இண்டர்ன்ஷிப்பில் கலந்துகொண்டு அனுபவமிக்க கற்றலைப் பெற்றனர். 18 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றனர், மேலும் 10 மாணவர்கள் உயர் படிப்பைத் தொடர்ந்தனர். மாணவர்கள் BBA-ல் 95.83% மற்றும் MIB-ல் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். பிபிஏ இரண்டாம் ஆண்டு மாணவன். ம.பிரசாந்த், NCC அணிவகுப்பில் தமிழ்நாடு முதல்வர் மற்றும் கவர்னர் பங்கேற்ற, ஜனவரி 26, 2025 குடியரசு தின விழாவில் பங்குபெற்றார்.

# வேதியியல் துறை
# ஆண்டறிக்கை 2024-2025

வேதியியல் மன்றக் கூட்டம் பிப்ரவரி 24ஆம் தேதியன்று கல்லூரி பொறுப்பு முனைவர். N.ஆனந்தவல்லி அவர்களின் தொடக்க உரையுடன் துவங்கியது. திருச்சி புனித சிலுவைக் கல்லூரியின் வேதியியல் துறை உதவிப் பேராசிரியை முன்னவர். மார்கிரேட் ஷீலா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு Retro Synth (ரெட்ரோ சின்தெசிஸ்ன்) பயன்பாடுகள் பற்றி விளக்கினார்.

தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு மாணர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பிப்ரவரி 28ஆம் தேதி அன்று திருச்சி தேசியக் கல்லூரியின் வேதியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் D சரவணன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றி பரிசுகளை வழங்கினார்.

வேதியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் தாரணி அவர்கள் Nano Electronic Devices ன் செயல் திறன் மேம்பாட்டிற்காக Bismuth fessite nanoparti cles-ஐப் பயன்படுத்தி தனி உரிமம் (Patent) பெற்று Green Chemistry and Catalysis என்ற நூலையும் சர்வதேச நாளிதழில் ஆய்வுக் கட்டுரையும் சமர்பித்துள்ளார். துறைத் தலைவர் முனைவர் B.R.வெங்கட்ராமன் அவர்கள் 26.02.2025 அன்று ஜமால் முகமது கல்லூரியில் வேதியியல் மன்ற நிறைவு விழாவில், சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

இணைப் பேராசிரியர் முனைவர். R.மலர்விழி அவர்கள் நான்கு FDP கலை நிறைவு செய்துள்ளார்.

உதவிப்பேராசிரியை முனைவர் K.Lakshmi Prabha அவர்கள் சர்வதேச மாநாட்டில் ஒரு ஆய்வுக் கட்டுரையை சமர்பித்துள்ளார். உதவிப் பேராசிரியர் முனைவர். பி.சகாய அமுதா அவர்கள் சர்வதேச நாளிதழில் ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டுள்ளார்.

உதவிப் பேராசிரியர் முன்னவர். K.தனிகைமணி அவர்கள் சர்வதேச நாளிதழில் மூன்று ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். பாரதிதாசன் பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் முதுஅறிவியல் மாணவிகள் R.Sharmila V Rank யும் M.Sangeetha XVI Rank யும் பெற்றுள்ளனர்.

# கணிதவியல்துறை
# ஆண்டு அறிக்கை 2024 - 2025

கணிதவியல் துறையில், இணைப்பேராசிரியர் முனைவர். பி.ரெங்கநாதன் அவர்கள், குளித்தலை அரசு கலைக் கல்லூரியிலிருந்து நமதுகல்லூரிக்குப் பணிமாறுதல் பெற்று துணைத்தலைவராகப் பொறுப்பேற்று உள்ளார், முனைவர் ப.முகமது ஹாரிப், உதவிப்பேராசிரியர், அவர்கள் தஞ்சை சரபோஜி அரசு கலைக்கல்லூரியிலிருந்து நமது கல்லூரிக்குப் பணிமாறுதல் பெற்று வந்துள்ளார். 2023-24 ஆம் கல்வியாண்டின் இளங்கலை தேர்ச்சி விழுக்காடு 84.21 % முதுநிலை தேர்ச்சி விழுக்காடு 100%

கணிதவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் பெ.அன்பழகன் மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர், கோ.ஶ்ரீவித்யா அவர்கள் பஞ்சாப்பின் லூர்தியானா என்ற இடத்தில் 01.03.25 முதல் 02.03.25 வரை நடைபெற்ற AI FUCTO Academic Conferance 2025 ல் பங்குப் பெற்றனர்.

கணிதவியல் துறைத் தலைவர் முனைவர்: பி.ரெங்கநாதன் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் முதுநிலை கணிதவியல் பாடத்திட்டக்குழும உறுப்பினராக 01.01.2005 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

01.02.2025 அன்று கணிதவியல் துறை Anti drug Commite மற்றும் IQAC சார்பில் போதை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது . 80 மாணாக்கர்கள் பங்குப் பெற்றனர் கணிதவியல் துறை மாணாக்கர்களுக்கு 26.02.2025 அன்று அறை எண் 45,47ல் துறை பேராசிரியர்கள் மூலம் Counselling Session வழங்கப்பட்டது. இதில் 75 மாணாக்கர்கள் பயன்பெற்றனர்.

கணிதவியல் துறையின் கணிதமன்றக்கூட்டம். 08.03.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக முனைவர் ம.வெங்கடாசலபதி, இணைப்பேராசிரியர். கணிதவியல் துறை SRM Institute of Science & Technology Trichy வருகை புரிந்து Scientific Application of Mathematics in Machine Learning and AI என்ற தலைப்பின் கீழ்சிறப்புரை நிகழ்த்தினார்.

## கணினி அறிவியல் துறை
## ஆண்டு அறிக்கை 2024 - 2025

04.03.2025 அன்று நடைபெற்ற கணினி அறிவியல் மன்ற விழாவில் முனைவர். மு. க்ரிஷாந்து, உதவிப் பேராசிரியர், Data Science துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சி- 2 அவர்கள், ENHANCE YOUR LEARNING WITH AI TOOLS என்ற தலைப்பில் மாணாக்கர்களுக்கு சிறப்புரையாற்றினார். துறைப் பேராசிரியர்கள் தெ.காயத்ரி மற்றும் ர. மங்கயர்கரசி இவ்வாண்டு முனைவர் பட்டம் பெற்றனர்.

துறை பேராசிரியர் முனைவர் தெ.காயத்ரி அவர்கள் Journal of Non Linear Analysis and Optimization என்ற UGC Care Listed இதழில் ஆய்வு கட்டுரை வெளியிட்டுள்ளார்.

துறை பேராசிரியர் திருமதி. சு. கல்விக்கரசி அவர்கள் International Journal of Computer Networks and Applications என்ற SCOPUS INDEXED இதழில் ஆய்வு கட்டுரை வெளியிட்டுள்ளார்.

முனைவர் பொ.அருள் வழிகாட்டுதல்படி ஆய்வு மாணவிகள் திருமதி. ந.சண்முகப்பிரியா மற்றும் ச. ரேணுகா முனைவர் பட்டம் பெற்றனர்.
முனைவர் பி. கால்டுவெல் நியூட்டன் அவர்கள் Holy Cross கல்லூரியில் July 7. 2024 அன்று B.Sc., Artificial Intelligence and Machine Learning பயிலும் மாணவர்களுக்கு Dream and Live your Dream என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

முதலாம் ஆண்டு பயிலும் மாணவன் தரணீசுவரன்.D. IBM Online Internship Opportunities என்ற Internship-க்கு பதிவு செய்து பயிற்சி பெற்று வருகிறார். மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவன் ச.சதீஷ்குமார், பாரதிதாசன் பல்கலைக்கழகம் NCC நடத்திய Combined Annual Training CAM-ல் கலந்து கொண்டு GUARD OF HONOUR CAMP SENIOR மற்றும் BEST CADET ஆகிய பதக்கங்களை பெற்றார்.

# இயற்பியல் துறை
# ஆண்டறிக்கை 2024 - 2025

இயற்பியல் துறைத் தலைவர் முனைவர் ம. அறிவழகன் அவர்களின் ஆய்வு வழிகாட்டுதலில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்ட மூன்று மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வறிக்கையினை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்துள்ளனர். மேலும் இந்த கல்வியாண்டில் பன்னாட்டு இதழில் 2 ஆய்வு கட்டுரைகள் எழுதி வெளியிட்டுள்ளார்.

இயற்பியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஜெ. தாமஸ் ஜோசப் பிரகாஷ் அவர்களின் முனைவர் பட்ட ஆய்வு வழிகாட்டுதலின் படி மாணவர்கள் மேரி டயானா, ரகு, பவித்ரா, சரண் ஆகியோர் பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, தனலட்சுமி ஸ்ரீனிவாசன் கல்லூரி, திருச்சி புனித சிலுவை கல்லூரி, தூய வளனார் கல்லூரி, ஜமால் முஹமது கல்லூரி, தஞ்சை பூண்டி புஷ்பம் கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கத்தில் கலந்துக்கொண்டு ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தனர். மேலும் இவர் இந்த கருத்தரங்கின் வல்லுனராகவும் செயல்பட்டார். இவரது ஆய்வு வழிகாட்டுதலின் படி மாணவி மேரி டயானா, பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, தனலட்சுமி ஸ்ரீனிவாசன் கல்லூரிகளில் நடைபெற்ற கருத்தரங்கில் BEST POSTER AWARD மற்றும் திருச்சி இந்திரா காந்தி கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் BEST ORAL AWARD பெற்றார்.

முனைவர் ஜெ. தாமஸ் ஜோசப் பிரகாஷ் அவர்களின் 104 ஆய்வுக் கட்டுரை வெளியீடு மற்றும் Google Citation 1127 மற்றும் h-Index15, i10 Index 26 இதன் அடிப்படையிலும் மற்றும் ஆராய்ச்சி, ஆய்வு கட்டுரை வெளியீடு அதன் அடிப்படையிலும் University of Central America இவருக்கு கவுரவ Doctor of Science பட்டத்தை 28-2-2025 அன்று வழங்கி சிறப்பித்துள்ளது.
இயற்பியல் துறை Spectrum Club of Physics Association மூலம் 5-03-2025 அன்று Photo Catalysis in Waste Water Treatment" என்ற தலைப்பில் Dr. V.பாண்டியன், உதவிப்பேராசிரியர், நேரு மெம்மோரியல் கல்லூரி, திருச்சி – 07 உரையாற்றினார்.

இயற்பியல் மற்றும் மின்னணுவியல் துறை இணைந்து போதை தவிர்! வாழ்வில் மிளிர்! என்ற தலைப்பில் திருமிகு. ஜெ. ஜெயசீலன், துணைக் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, திருச்சி மாவட்டம் மேலும் முனைவர்.ச.பிரபு. உறுப்பினர், மாவட்ட குழந்தைகள் நலக்குழு, திருச்சி மாவட்டம் ஆகிய இருவரும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு உரையாற்றினார்கள்.

# அரசியல் அறிவியல் துறை
# ஆண்டறிக்கை 2024 - 25

கல்வியியல் அனுபவத்தை மேலும் வளப்படுத்தும் வகையில், 2025 மார்ச் 19 அன்று 'போட்டித் தேர்வுகளில் வெற்றி நோக்கி வழிநடத்துதல்: அரசியல் அறிவியல் ஒரு கலங்கரை விளக்கம்' என்ற தலைப்பில் துறை ஒரு மன்ற விழாவினை நடத்தியது. பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் துறையின் உதவிப் பேராசிரியரும் இயக்குனருமான டாக்டர் கே. செல்வகுமார் வள ஆதார நபராகச் செயல்பட்டு, அரசியல் அறிவியலில் ஒரு திடமான அடித்தளம் போட்டித் தேர்வுகளில் வெற்றிக்கு எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பது குறித்த விலைமதிப்பற்ற நுண்ணறிவுகளை வழங்கினார்.

அரசியல் அறிவியல் துறையின் தலைவர் டாக்டர் ஏ. ஜோசப், 2025 மார்ச் 1 அன்று பஞ்சாப் வேளாண்மை பல்கலைக்கழகம், லூதியானாவில் நடைபெற்ற அகில இந்தியப் பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர் அமைப்புகளின் 33வது கல்வி மாநாட்டில் கலந்துகொண்டார்

அனுபவ கற்றலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 2025 பிப்ரவரி 21 அன்று துறை ஒரு கல்விச் சுற்றுலாவை ஏற்பாடு செய்தது. இந்த வளமான அனுபவத்தில் 5 ஊழியர்களும் 44 மாணவர்களும் கலந்து கொண்டனர்,

2024 டிசம்பர் 8 அன்று, பி.ஹெச்.இ.எல் மற்றும் ஆதி திராவிடர். நலத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியலமைப்பு தின போட்டிகளில் மாணவர்கள் கலந்து கொண்டு எஸ்.வி. பேச்சுப் குறிப்பிடத்தக்க பாராட்டுகளைப் பெற்றனர். சுபஹாரிணி போட்டியில் முதல் பரிசையும், ஜனனி சுவரொட்டி தயாரிப்பில் இரண்டாம் பரிசையும் வைரவளவன் பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசையும் பெற்றனர். 2024 பிப்ரவரி 18 அன்று திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தனுஸ்ரீ டி. கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசையும், ஜனனி வி மற்றும் சிவதாரிணி கே..ரங்கோலி போட்டியில் இரண்டாம் பரிசையும் பெற்றனர். இந்த சாதனைகள் மாணவர்களின் திறமை, மற்றும் துறையால் வழங்கப்படும் கல்வியின் தரத்திற்குச் சான்றாக நிற்கின்றன.

# மின்னணுவியல் துறை
# ஆண்டறிக்கை 2024-2025

முனைவர் எஸ். காளிதாஸ், இணை பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், 06.9.24 அன்று எஸ்.ஆர்.எம்.வி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூரில் முனைவர் பட்ட மாணவருக்கு துறை சார்ந்த நிபுணராக ஆய்வில் கலந்து கொண்டார்.

13.6.24 அன்று மயிலாடுதுறை ஏ . வி . சி . கல்லூரியில் நடைபெற்ற பாடத்திட்டக் குழு நிபுணராகக் கலந்து கொண்டார். மேலும். 20.9.24 அன்று பாரதியார் பல்கலைக்கழகத்தில் மின்னணுவியல் மற்றும் இன்ஸ்ட்ருமெண்டேஷன் துறையில் முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வில் துறை சார்ந்த நிபுணராக கலந்துகொண்டார். மின்னணுவியல் துறை உதவிப்பேராசிரியர் எல்.துர்கா தேவி மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியில், மின்னணு அறிவியல் துறையில் Automotive tronics என்ற தலைப்பில் உரையாற்றி சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார். 23.9.24 மற்றும் 04.9.24 ஆகிய இரு நாட்களில், எம்ஐடி, குரோம்பேட்டை மின்னணுவியல் துறையில் நடைபெற்ற தேசிய அளவிலான proficient use measurement of filedoronic Test Equipments and EMIFMC Solutions என்ற பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றார்.

மேலும், சென்னை, அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய இரண்டு வாரகால பணியிடைப் பயிற்சியில் 23.2.24 முதல் 4.1.25 வரை கலந்து கொண்டார்
மின்னணுவியல் துறை உதவிப்பேராசிரியர் N. ஜெய்சங்கர் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 26.11.24 முதல் 9.12.24 வரை நடைபெற்ற புத்தாக்கப் பயற்சியில் பிஸிக்கல் சயின்ஸ் பிரிவில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றார்,
மின்னணுவியல் துறை உதவிப் பேராசிரியர் வீ.வித்யா, டிசம்பர் 2024 ஆப்பிள் அகாடமிக் பிரஸ் பதிப்பில் புத்தக சாப்டரை வெளியிட்டுள்ளார். 10.02.25 ல் மின்னணுவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றார்.

17.02.05 முதல் 26.02.05 வரை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற Indian knowledge system and value Education என்ற தலைப்பில் குறுகிய கால பயிற்சியில் கலந்து கொண்டார்.

ஈரோடு, வெள்ளாளர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான அறிவியல் தின நிகழ்வில் எஸ் . அபிஷேக் மற்றும் எம்.முத்தமிழன் இரண்டாமாண்டு முதுகலை மாணவர்கள் எலக்ட்ரானிக்ஸ், ப்ராஜெக்ட் விளக்கத்தில்

இரண்டாம் பரிசினைப் பெற்றனர். அவர்களுடன் கே.கார்த்திக்ராஜா மற்றும் எ. ரிகேஷ்ரன் ஆகிய இரண்டாமாண்டு முதுகலை மாணவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றனர்.

12.2.25 அன்று மின்னணுவியல் துறையில் திருச்சி, சீதாலக்ஷ்மி ராமசாமி கல்லூரியில் மின்னணுவியல் துறை உதவி பேராசிரியர் முனைவர். R.அமுதவல்லி அவர்கள் துறைசார்ந்த கூட்டத்தில், Industrial Automation & IOT என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

15.3.25 அன்று போதை பொருளுக்கெதிரான விழிப்புணர்வினை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில் மின்னணுவியல் துறை மற்றும் இயற்பியல் துறை இணைந்து நடத்திய 'போதை தவிர்! வாழ்வில் மிளிர்' என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் நடத்தப்பட்டது . இக்கருத்தரங்கத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு துணைக் கண்காணிப்பாளர் திரு ஜெ.ஜெயசீலன் மற்றும் திருச்சி மாவட்ட குழந்தைகள் நலக்குழு உறுப்பினர் முனைவர் முனைவர் ச. பிரபு ஆகியோர் மாணவர்களிடையே உரையாற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்,

# வாழ்க்கை வாழ்வதற்கே

உயிரைக் கொல்லும் உறவை இழக்கும்
உணர்வை மறக்கும் உன்னையே வெறுக்கும்
செயல் இழப்பு. அமைதி குறைவு... உயிர் பறிப்பு.... அவமானத் தொய்வு..
இதுவெல்லாம் வருவது மதுவினால்
இன்பத்தில் திளைப்பாய்..... குதூகலமாய் இருப்பாய்....
குடும்பத்தை இழப்பாய்.. இனிய வாழ்வைத் துறப்பாய்...
சிற்றின்ப போதைக்காக பேரின்ப வாழ்வை இழக்காதே...
இத்தனையும் இழந்து இன்பத்தில் திளைத்து.....
துன்பத்தைக் கொடுக்கும் இனியும் மது தேவையா?...
இன்று முதல் உறுதி எடுப்போம் இனி ஒரு விதி செய்வோம்...
மதுவை ஒழிப்போம். மனிதம் காப்போம்... மகிழ்ச்சியாய் வாழ்வோம்...
போதையற்ற உலகு.... மதுவிடமிருந்து விலகு... ஆம்
வாழ்க்கை வாழ்வதற்கே....

முனைவர். **த.இளையராஜா**
வணிகவியல் துறை
அரசு கலைக் கல்லூரி,
திருச்சி -22.

# காட்சித் தொடர்பியல் துறை
# ஆண்டறிக்கை ( 2024 - 2025 )

2024 ஆம் கல்வியாண்டில் சேர்ந்த முதலாமாண்டு இளமறிவியல் மாணவர்களுக்கு 08.07.24 முதல் 12.07.24 வரை மாணவர் வழிகாட்டுதல் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

08.07.24 – யோகா குருவும், காஸ்மிக் யோகா மையத்தின் உரிமையாளருமான திருமதி பிரியதர்ஷினி பன்னீர்செல்வம், 'உள்ளும் வெளியேயும் குணப்படுத்துதல்: யோகாவின் உருமாற்ற சக்தி என்ற தலைப்பில் ஒரு அமர்வை நடத்தினார்.
09.07.24– ஜமால் முகமது கல்லூரியின் காட்சித் தொடர்பியல் உதவிப் பேராசிரியர் திரு.பி.ராமகிருஷ்ணன் ஓவியங்கள் வரைதலின் அடிப்படைகள் குறித்து செய்முறை விளக்கம் அளித்தார்.
10.07.24 – திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் காட்சித் தொடர்பியல் உதவிப் பேராசிரியர் திரு.கே.சண்முக வேலாயுதன், 'உணர்ச்சிகளைக் காட்சிப்படுத்துதல்: உணர்ச்சி நுண்ணறிவுக்கு ஒரு அறிமுகம் என்ற தலைப்பில் ஒரு அமர்வை நடத்தினார்.

11.07.24 – திருமண புகைப்படக் கலைஞர், திரு. ஆகாஷ் வின்சென்ட், 'புகைப்படக் கலை மற்றும் அறிவியல் என்ற தலைப்பில் ஒரு அமர்வை நடத்தினார்.

12.07.24 – மதுரை, புனித மேரி நிறுவனங்களின் ரெக்டர் டாக்டர். வி. ஹென்றி ஜெரோம், 'டிஜிட்டல் சுத்திகரிப்பு: சமூக ஊடக நச்சு நீக்கத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் ஒரு அமர்வை நடத்தினார்.

செப்டம்பர் 20, 2024 அன்று, திருச்சி மாவட்ட நிருபர் திருமதி எஸ்.எஸ். பிருந்தா ஸ்ரீஹரிஸ், கள அறிக்கையிடலில் உள்ள சவால்கள் என்ற தலைப்பில் பேசினார்.
அக்டோபர் 3, 2024 அன்று, ஸ்காட்லாந்தில் உள்ள ஹரியட்வாட் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இணைப்பேராசிரியரான சுதாகர் பிச்சைமுத்து, சமூக ஊடக எழுத்தின் சிக்கல்களை வழிநடத்துதல் போக்குகள், ஈடுபாடு மற்றும் உத்தி குறித்த சர்வதேச இணையக் கருத்தரங்கில் உரையாற்றினார்.

மாணவர்களின் சாதனைகள் :
திருச்சியில் உள்ள மா காவேரி மருத்துவமனையால் செப்டம்பர் 22, 2024 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட திருச்சி மாரத்தான் 2024 ல், அதிகாரப்பூர்வ புகைப்படக் கலைஞர்களில் ஒருவராக முதலாமாண்டு முதுஅறிவியல் மாணவர் ஜா . மஹதீர் முகமது பணியாற்றினார்.

மும்பையில் நடைபெற்ற தேசிய அளவிலான ஒளிப்படப் போட்டியில் முதலாமாண்டு முதுஅறிவியல் மாணவர் ஹ.முகமது ஜாவீத் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

முதலாமாண்டு முதுஅறிவியல் மாணவர் ஜோ . ராபின் இஸ்ரேல், திருச்சி, புனித வளனார் கல்லூரியின் மாணவர் மன்றத்தால் பிப்ரவரி 20, 2025 அன்று நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான விழிப்புணர்வுப் போட்டியில், 'போதை பழக்கமும் மாணவர்களும்' என்ற தலைப்பில் 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற சுவரொட்டி தயாரிப்புப் போட்டியில் இரண்டாம் இடம் வென்றார்.

திருச்சி, புனித சிலுவைக்கல்லூரியின் முதுகலை மற்றும் ஆராய்ச்சித் துறையால் பிப்ரவரி 15, 2025 அன்று நடத்தப்பட்ட சர்வதேச குறும்பட விழாவில், காட்சித் தொடர்பியல் துறையால் தயாரிக்கப்பட்ட 'டும் டும் டும் குறும்படத்திற்கு திரைப்படத் தயாரிப்பில் மூன்றாவது பரிசு வழங்கப்பட்டது.

பிப்ரவரி 18, 2025 அன்று மதுரை, பாத்திமா கல்லூரியின் காட்சித் தொடர்பியல் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்லூரிகளுக்கிடையேயான போட்டியான ஸ்பெக்ட்ரம் 2025 இல் இரண்டாம் பரிசு வழங்கப்பட்டது.

பிப்ரவரி 18, 2025 அன்று திருச்சி, புனித சிலுவைக்கல்லூரியில் வேதியியல் துறை நடத்திய கல்லூரிகளுக்கிடையேயான குறும்படப்போட்டியில் மூன்றாமாண்டு இளமறிவியல் மாணவி சா .அகிலா முதல் பரிசை வென்றார்.

காட்சித் தொடர்பியல் துறையால் தயாரிக்கப்பட்ட 'பெயர் ' என்ற குறும்படம், பிப்ரவரி 21, 2025 அன்று பாளையங்கோட்டையில் உள்ள செயிண்ட் சேவியர் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான போட்டியான ஆர்ட் பீட்டில் முதல் பரிசையும், பிப்ரவரி 27, 2025 அன்று சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை நடத்திய கல்லூரிகளுக்கு இடையேயான போட்டியான த்ரிஷ்யாவில் முதல் பரிசையும் வென்றது.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற கல்லூரிகளுக்கிடையேயான ஏப்ரல் 2024 க்காக தரவரிசை தேர்வில் முது அறிவியல் மாணவர்கள் மோ.ராபர்ட் இராஜையா மற்றும் அ .சண்முகப்பிரியா முறையே மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களைப் பெற்றனர். இளமறிவியல் மாணவி. பி.அமலாஜான்சி ஐந்தாம் இடம் பெற்றார்.

## இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் ஆண்டறிக்கை (2024 - 25)

நமது கல்லூரி இளைஞர் செஞ்சிலுவைச் சங்க மாணவ மாணவிகள் 27.09. 2024 திருவெறும்பூர் போக்குவரத்து ஆய்வாளர் தலைமையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நமது கல்லூரி அரங்கத்தில் நடைபெற்றது.

19.02.2024 அன்று நமது கல்லூரி இளைஞர் செஞ்சிலுவைச் சங்க மாணவ மாணவிகள் சித்த மருத்துவ தினத்தை முன்னிட்டு சித்த மருத்துவமும் வாழ்வியல் முறையும் என்ற தலைப்பில் துவாக்குடி அரசு மருத்துவமனை சித்த மருத்துவர் லாவண்யா சிறப்புரையாற்றினார்.

29.01.2025 அன்று நமது கல்லூரி இளைஞர் செஞ்சிலுவைச் சங்க மாணவ மாணவிகள் HIV-AIDS பற்றி விழிப்புணர்வு கருத்துகளை மருத்துவர் எ.கவிதா மாணவ மாணவிகளுக்கு கருத்துகளை வழங்கினார்.

10.02.2024 அன்று நமது கல்லூரி இளைஞர் செஞ்சிலுவைச் சங்க மாணவ மாணவிகளுக்கு குடற்புண் நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டது.

## கூட்டுறவியல் துறை ஆண்டறிக்கை (2024 - 25)

கூட்டுறவுத் துறையில் கடந்த 2024-25 ஆம் கல்வியாண்டில் ஜூலை 15-ம் தேதி 'பக்கத்து அறையில் காத்திருக்கிறது வெற்றி என்ற தலைப்பில் திரு.V.ரெங்கநாதன், வழக்கறிஞர் சிறப்பு விருந்தினராக வருகைப்புரிந்து சிறப்புரையாற்றினார். 16.07.2024 அன்று கூட்டுறவே நாட்டுயர்வு என்ற தலைப்பில் அரசு கலைக்கல்லூரி, கூட்டுறவியல் துறை உதவிப்பேராசியர் பெ.சீனிவாசன் சிறப்புரையாற்றினார். கூட்டுறவுத் துறையில் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு களப்பணிக்குச் சென்று சான்றிதழ்கள் பெற்றனர். மேலும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் இளங்கலை மாணவர்கள் முதல் ஐந்து இடங்களையும் மற்றும் முதுகலை மாணவர்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்று கூட்டுறவுத் துறைக்குப் பெருமை சேர்த்தனர்.

# பொதுநிர்வாகவியல் துறை
# ஆண்டறிக்கை 2024-2025

எமது பொது நிர்வாகவியல் துறையும் மற்றும் கல்லூரியின் எக்ஸ்னோரா அமைப்பும் இணைந்து 18.02.2025 அன்று சுற்றுப்புறச் சூழல் மற்றும் நெகிழி பயன்பாட்டின் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு ஏற்பாடு செய்திருந்தனர்.

உலக தாய்மொழி நாள் (21.02.2025) முன்னிட்டு நமது கல்லூரியில் பொது நிர்வாகவியல் துறை மற்றும் தமிழரண் மாணவர்கள் இணைந்து 20.02.2025 அன்று மாணாக்கர்களுக்கான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் கண்டறிதல் போன்ற போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

எமது துறை மன்ற விழாவில் கல்லூரியின் போதை எதிர்ப்பு குழுவுடன் இணைந்து போதையில்லா சமூகத்தை உருவாக்கிட ஓர் தேடல்' என்ற தலைப்பில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. அருட்பணி பிரான்சிஸ் ஜெயபதி, சே.ச., இயக்குநர், அருட்பே சுகாலயம் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

எம் துறை மூன்றாமாண்டு மாணாக்கர்களின் நேரடி கள அனுபவத்திற்காக முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் District Court நிகழ்வுகளில் ஒன்பது மாணவர்கள், மூன்று மாணவிகள் சமூகநலத் துறையின் கீழ் துறையூர் பகுதியில் செயல்படுகின்ற ஒரு நிறுத்த மையத்திலும் One Stop Centre திருச்சிராப்பள்ளி ஆட்சியரகத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் ஆறு மாணவிகளும், திருச்சி, திருவானைக்கோவில் பகுதியில் அமைந்துள்ள வாய்ஸ் அறக்கட்டளை நிறுவனத்தில் அரசுசாரா அமைப்புடன் இணைந்து நேரடி கள அனுபவம் பெற ஆறு மாணவிகள் சென்றிருந்தனர். எம் துறை மாணவர் –அச்சம் தவிர் அறப்போர் செய் என்ற அமைப்பில் ஒருவரும், மனித உரிமைகள் பணிகளை முன்னெடுத்து மதுரையில் இருந்து செயல்படுகின்ற 'மக்கள் கண்காணிப்பகம் என்ற நிறுவனத்தில் நேரடி கள அனுபவத்திற்காக சென்றிருந்தனர்.

எம் துறை மாணவ, மாணவிகள் கல்லூரி அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, நடனப் போட்டி, விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பரிசுகளை வென்றுள்ளனர்.

பொது நிர்வாகவியல் துறை மன்றத்தின் சார்பாக மாணாக்கர்களுக்கு 'பொது நிர்வாகவியலில் பயிலுவதால் கிடைக்கின்ற பணிவாய்ப்புகள் என்ற தலைப்பில் முனைவர். ஆர்த்தி சரவணன், இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், அரசியல் அறிவியல் துறை, பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம், வல்லம் அவர்கள், கடின உழைப்பும், விடாமுயற்சியும் என்றும் மாணாக்கர்களின் இலக்கை எளிதில் அடைய வழிவகுக்கும் என மாணாக்கர்களை ஊக்குவித்தார்.

# புவியியல் துறை
# ஆண்டறிக்கை 2024-2025

பல்கலைக்கழக அளவில் புவியியல் துறையில் இளம்புவி அறிவியல் பாடத்தில் முதல் இரண்டு இடங்களை G.பொன்மணி R. ஞானபிரகாஸ் ஆகிய இருவரும் இத்துறைக்குப் பெருமை சேர்த்து உள்ளனர்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின், கடல்சார்ந்த அறிவியல் துறையின் பேராசிரியர் மற்றும் இயக்குனருமான Dr.R.ஆர்த்தர் ஜேம்ஸ் தலைமையில் 19.09.2024 அன்று ஒருநாள் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது.

பிப்ரவரி -24 ஆம் நாள் அரசு கலை கல்லூரி, திருச்சி 22ல் தொழில் மற்றும் நில அறிவியல் துறை தமிழ் பல்கலைகழகம் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதனைத் தொடர்ந்து தேசியக் கருத்தரங்கம் 28.02.2025 அன்று Dr.M.சிவகுமார் மண்டல இயக்குநர் தென்கிழக்கு கடலோர மண்டலம் ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் திரு C.K. ராஜ இயக்குநர் இந்திய புவியியல் அமைப்பு துறை ஹைதொராபாத், ஆகிய இருவரும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்

15.03.2025 அன்று புவியியல் துறையில் மன்ற கூட்டம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தமிழ்ப் பல்கலைக் கழகம் மேனாள் துணைவேந்தரும் பேராசிரியருமான Dr.K.சங்கர் அவர்கள் 'புவி அறிவியலில் உலகை ஆராய்வோம்' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

14.02.2025 அன்று நிலக்கோட்டையில் உள்ள அரசு மகளிர் கலைக் கல்லூரி புவியியல் துறையில் நடைபெற்ற 'புவி தகவல் அமைப்பின் பயன்பாடு என்ற தலைப்பில் ' தேசியக் கருத்தரங்கிற்கு சிறப்பு விருந்தினராக Dr.S.பால செல்வகுமார் துறைத் தலைவர் சிறப்புரையாற்றினார்.

2024 நவம்பர் மாதம் 26 to 28 வரை கொழும்புவில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் நிலத்தடி நீரின் தரம் பற்றிய ஆய்வு கட்டுரையை Dr.D.சாந்தி இணைய வழியில் விரிவுரையாற்றினார்.

# உளவியல் துறை
# ஆண்டறிக்கை 2024-2025

உளவியல்துறை மாணவர்கள் 2021-24ம் ஆண்டில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். மற்றும் பல்கலைகழகத்தின் முதல் மூன்று தரவரிசையை பெற்றுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். செல்வி, S.MOUNIKA தங்க பதக்கம் பெற்றார்.

06.09.2024 அன்று முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு அறிமுக விழா நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக முனைவர் E.முபாரக் அலி சுய நிதி வணிகவியல் துறைத்தலைவர், ஜமால்முஹமது கல்லூரி, திருச்சி. The Best is Yet to Come என்ற தலைப்பில் கருத்துக்களை மாணவர்களுக்கு புரியும் விதத்தில் சிறப்புரை வழங்கினார்.

10.10.2024 உலக மனநல நாளை முன்னிட்டு உளவியல் துறையின் மாணவர்கள் நமது கல்லூரியின் உள் கலையரங்கத்தில் உளவியல்சார்ந்த நோய்கள் மற்றும் போதை தொடர்பான விழிப்புணர்வு குறித்த விளக்கப்படம் மற்றும் கண்காட்சி நடத்தப்பட்டது. முனைவர் S.அப்துல்சலாம் அவர்கள் கண்காட்சியை துவக்கி வைத்தார். இந்த காட்சியை 11 பிறத்துறை பேராசிரியர்களும், 171 பிறத்துறை மாணவர்களும் பார்த்து ரசித்தனர். இதன் தொடர்ச்சியாக முனைவர் S.சுவேதா சமூக பணித்துறை கௌரவ விரிவுரையாளர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு Its Time to Prioritize Mental Health in the Workshop என்ற தலைப்பில் கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்து கூறினார்.

உளவியல் துறையின் மாணவர்களுக்கு 06.02.2025 அன்று போதை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. முனைவர் R.தேவநாதன் சமூக பணித்துறை கௌரவ விரிவுரையாளர் சிறப்பு விருந்தினராக வந்திருந்து "போதை தவறான பாதை" என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார்.

உளவியல் துறையின் மன்றக்கூட்டம் 15.03.2025 அன்று நடைபெற்றது. திருமதி. G.பிரவீனா கார்மேல் நிறுவனர் மற்றும் இயக்குநர், டால்பின் சிறப்பு பள்ளி, தில்லைநகர், திருச்சி. சிறப்பு விருந்தினராக வந்திருந்து "Enhancing the Psychology need for special Children" என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். இந்த கூட்டம் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரி 5 நாட்கள் இணைய வழியில் (10.02. 2025 முதல் 14.02.2025 வரை) நடத்திய FDP யில் 13.02.2025 அன்று Building Mental Resilience என்ற தலைப்பில் திருமதி. இரா. பூங்குழலி இணைய வழியில் சிறப்புரை வழங்கினார்.

முனைவர் S.D.பாத்திமா பானு, புனித வளனார் கல்லூரியின் Board of Study Member ஆகவும் அன்னை சத்யா குழந்தைகள் இல்லத்திற்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்யும் தேரிவு வாரிய குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

உளவியல் துறையில் பயிலும் 21 மாணவர்கள் ஜெயா சிறப்பு பள்ளி மற்றும் அறிவாலயம் சிறப்பு பள்ளியில் 15 நாட்கள் காலையில் மட்டும் சென்று Internship பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்றவர்.

04.02.2025 முதல் 06.02.2025 வரை மூன்று நாட்கள தமழ்நாடு கல்வித்துறை நடத்திய State Level Achievement Survey (SLAS) கணக்கெடுப்பில் முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு உளவியல் துறை 25 மாணவர்கள் அரசு பள்ளிகளுக்கு சென்று சமூக பணியாற்றினார்கள்.

உளவியல் துறையில் முதலாம் ஆண்டு படிக்கும் மாணவி செல்வி. M. தாரணி நம் கல்லூரியிலும் பிற கல்லூரிகள் நடத்தும் பேச்சுப்போட்டியிலும் கலந்து கொண்டு ரொக்கப் பரிசு பெற்றார்.

பெற்றோர் ஆசிரியர் கூட்டம் உளவியல் துறையில் 26.09.2024 இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் 27.09.2024 மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கும் 19.03.2025 முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் நடைபெற்றது.
இந்த கூட்டத்தில் 50க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



# இதழியலும் மக்கள் தொடர்பியலும்
# ஆண்டறிக்கை 2024 - 2025

இதழியலும் மக்கள் தொடர்பியலும் துறையின் இரண்டாம் ஆண்டு மாணவன் பெ கார்த்திகேயன் விகடன் மாணவர் பத்திரிகையாளர் பயிற்சிக்கு தேர்வாகி பகுதிநேர மாணவப் பத்திரிகையாளராக ஜீலை 2024 முதல் பணியாற்றி வருகிறார்.

முதலாமாண்டு மாணவி தி மகாலட்சுமி 20-2-2025 அன்று தாய்மொழி தினத்திற்கான பேச்சுப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றார்.
இரண்டாம் ஆண்டு மாணவி சு பூரணி 29-1-2024 அன்று தமிழ் மாணவர் மன்றம் சார்பாக நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதல் பரிசு ரூபாய் ஐந்தாயிரம் பெற்றார். திருச்சி புனிதச் சிலுவைக் கல்லூரியில் 18-2-2025 அன்று உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடைப்பெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

இரண்டாம் ஆண்டு மாணவர் கா சிவசங்கர் 26-9-2024 அன்று கலக்கவாராங்க தமிழ் பசங்க பண்பாட்டுக் கலை நிகழ்ச்சியில் பறையாட்டத்தில் முதல் பரிசு பெற்றார்.
இரண்டாம் ஆண்டு மாணவர் மா வசந்தகுமார் தேசிய மாணவர் படை மூலம் Directorate RDC Launch II தேர்வில் தேர்வாகி புதுடெல்லியில் குடியரசு தின முகாமில் கலந்து கொள்ளும் அரிய வாய்ப்பைப் பெற்றார் 27-1-2025 அன்று நடைபெற்ற பிரதம மந்திரி அணிவகுப்பிலும் கலந்து கொண்டார்

கௌரவ விரிவுரையாளர் முனைவர் ச தனபாண்டி சென்னை அகில இந்தியா வானொலி நிலையத்தில் பெருமைமிகு பாரதம் நிகழ்ச்சியில் உரையாற்றியுள்ளார்.
மா சிவகுருநாதன் அவர்கள் 18-02-.2025 அன்று கரூர் ஜெயராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த ஒரு நாள் பயிற்சி பட்டறையில் Mastering Mobile Journalism Story Telling Through Smart Phone என்ற தலைப்பில் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார் 14-2-2025 அன்று இதழியலும் மக்கள் தொடர்பியலும் துறையின் பேரவை விழாவில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி காட்சித் தொடர்பியல் துறைத் தலைவர் திரு கே சண்முக வேலாயுதம் அவர்கள் Influence of Digital Media on Modern Journalism Challenges and opportunities என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

# சமூகப் பணித்துறை
# ஆண்டறிக்கை 2024 - 2025

சமூகப் பணித்துறையின் பேரவைக் கூட்டம் 17.03.2024 அன்று 'மன நலம்' என்ற தலைப்பில் சமூகப் பணித்துறையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக ஆத்மா மருத்துவமனையின் சமூக மனநல ஆலோசகர் திரு. கரன் லூயிஸ் அவர்கள் சிறப்புரை வழங்கினார். சமூகப்பணி துறையின் ஒருங்கிணைப்பாளர், இணைப் பேராசிரியர், முனைவர் பி.டேவிட் லிவிங்ஸ்டன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

சமூகப் பணித்துறை கௌரவ விரிவுரையாளர்கள் போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நமது கல்லூரியில் பல்வேறு துறைகளில் சிறப்புரையாற்றினர். முனைவர் மா.பிரபு அரசியல் அறிவியல் துறையிலும் முனைவர் சு.சுவேதா வரலாற்று துறையிலும் முனைவர் இரா.தேவநாதன் உளவியல், ஆங்கிலத்துறை மற்றும் வேதியியல் துறையில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டனர்.

சமூகப் பணித்துறையின் இரண்டாம் ஆண்டு 18 மாணவர்கள் தங்கள் நிபுணத்துவத்தின் அடிப்படையில் ஒரு மாதத்திற்கு பல்வேறு தொழிற்சாலைகளிலும் அரசு சாரா நிறுவனங்களிலும், மருத்துவமனைகளில் பயிற்சி மேற்கொண்டனர்.

அனுபவக் கற்றலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 2025 பிப்ரவரி 21 அன்று துறை ஒரு கல்விச் சுற்றுலாவை ஏற்பாடு செய்தது. இந்த வளமான அனுபவத்தில் 5 ஊழியர்களும் 44 மாணவர்களும் கலந்து கொண்டனர்,

மாணவர்களின் சாதனைகளில் துறையும் பெருமை கொள்கிறது. 2024 டிசம்பர் 8 அன்று, பி.ஹெச்.இ.எல் மற்றும் ஆதி திராவிடர் நலத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியலமைப்பு தின போட்டிகளில் மாணவர்கள் கலந்து கொண்டு குறிப்பிடத்தக்க பாராட்டுகளைப் பெற்றனர். சுபஹாரிணி எஸ்.வி. பேச்சுப் போட்டியில் முதல் பரிசையும், ஜனனி சுவரொட்டி தயாரிப்பில் இரண்டாம் பரிசையும், வைரவளவன் பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசையும் பெற்றனர். மேலும், 2024 பிப்ரவரி 18 அன்று திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தனுஸ்ரீ டி. கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசையும், ஜனனி வி மற்றும் சிவதாரிணி கே. போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளை வென்றனர்.

# விளையாட்டுத் துறை
# ஆண்டறிக்கை 2024-2025

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளுக்கு இடையேயான தடகளப் போட்டி திருச்சி அண்ணா விளையாட்டரங்கில் 2.12.24 அன்று நடைபெற்ற போட்டியில் நமது கல்லூரி மாணவி P.KALVIKARASI THIRD YEAR B.Com.,(Co.Op) 1500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கமும் 5000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெண்கலப் பதக்கமும் வென்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

தமிழ்நாடு தடகள சங்கம் சார்பில் மாநில அளவிலான தடகளப் போட்டி சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் 22.02.2025 அன்று நடைபெற்ற போட்டியில் நமது கல்லூரி மாணவி P.KALVIKARASI THIRD YEAR B.Com.,(Co.Op) 3000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தங்கப் பதக்கமும் 1500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கமும் வென்று நமது கல்லூரிக்கும் மற்றும் திருச்சி மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளுக்கு இடையேயான கராத்தே போட்டி உருமு தனலட்சுமி கல்லூரியில் 25.02.2025 அன்று நடைபெற்ற போட்டியில் நமது கல்லூரி மாணவர் P. KABILESH FIRST YEAR BA HISTORY வெள்ளிப் பதக்கமும் நமது கல்லூரி மாணவர் M. HARIHARAN FIRST YEAR B.Com., வெள்ளிப் பதக்கமும் நமது கல்லூரி மாணவி V.JEEVIGA FIRST YEAR BCA வெண்கலப் பதக்கமும் வென்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.
முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் திருச்சி அண்ணா விளையாட்டரங்கில் நடைபெற்றது. அப்போட்டியில் நமது கல்லூரி சார்பாக கபாடி மற்றும் கிரிக்கெட் அணியினர் கால் இறுதிவரை முன்னேறி நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

# நாட்டு நலப்பணி திட்ட செயல்பாடுகள்
# ஆண்டறிக்கை 2024-2025

அரசு கலைக்கல்லூரி திருச்சி 22 ல் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பாக 10.07.24 மக்கள் உரிமைகள் சமூக பாதுகாப்பு அமைப்பு மற்றும் ஆத்மா மருத்துவமனை இணைந்து நடத்தும் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் கல்லூரியின் முதல்வர் முனைவர் நா. ஆனந்தவல்லி அவர்களின் தலைமையில் நடைப் பெற்றது.

27-9-24 அன்று திருவெறும்பூர் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தலைமையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைப்பெற்றது

24.1.2025 அன்று 76 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு NSS மாணவர்களால் வளாகம் முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு கல்லூரி முதல்வர்(பொ) அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று தேசியக் கொடியை ஏற்றி சிறப்புரையாற்றினார்.

29.01.25 அன்று மண்ணும் மரமும் என்ற அமைப்பின் தலைவர் திரு.ராஜீ அவர்கள் நமது கல்லூரி வளாகம் முழுவதும் 25 மரக்கன்றுகள் நடப்பட்டது. மேலும் 29.01.25 அன்று மதியம் வேல்டுடிரஸ்ட் மற்றும் மக்கள் உரிமைகள் சமூக பாதுகாப்பு அமைப்பும் இணைந்து HIV/AIDS பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களை திருமதி. A.கவிதாதேவி (ICTC ஆலோசகர்) மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்.

30.1.25 அன்று நமது கல்லூரியில் தீண்டாமை ஒழிப்பு தின உறுதிமொழி எடுக்கப்பட்டது.

19.2.25 அன்று கல்லூரி கல்வி இயக்குநர் வருகையை முன்னிட்டு நமது கல்லூரி வளாகம் முழுவதும் தூய்மைச் செய்யப்பட்டது.

12.3.2025 நமது கல்லூரி முதல்வர் (பொ) நா. ஆனந்த வல்லி அவர்களின் தலைமையில் PWD ஒருங்கிணைப்பாளர் திரு G.K. மணி முன்னனிலையில் மரக்கன்று நடப்பட்டது. மேலும் அம்மரக்கன்றுகளை நாட்டு நலப் பணித்திட்டம் சார்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

# உலக மகளிர் தின விழா
# ஆண்டறிக்கை 2024 - 25

08.03.2025 அன்று பெருங்குடல் மற்றும் மழக்குடல் புற்றுநோய் (Colon Cancer) பற்றிய பெண்களுக்கான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியை சமூக பணித்துறை, உளவியல் துறை மற்றும் எகுடாஸ் நிறுவனமும் இணைந்து நடத்தியது. ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனையின் அறுவை சிகிச்சை மருத்துவர் கே. சுபாஷ்மேத்தா அவர்கள் பெருங்குடல் மற்றும் மழக்குடல் புற்றுநோய் பற்றிய தகவல்களையும், மாணவர்கள் கேட்ட சந்தேகங்களுக்கு விளக்கங்களையும் தெரிவித்தார் இந்த நிகழ்ச்சியில் 200 மாணவிகளும் பேராசிரியர்களும் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

மகளிர் தினவிழா 10.03.2025 அன்று கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக இரண்டு முதல்வர்கள் பங்கு கொண்டார்கள். ஒருவர் முனைவர் கே. அங்கம்மாள், முதல்வர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருக்காட்டுப்பள்ளி. மற்றும் ஒருவர் முனைவர். V. சுஜாதா முதல்வர் காவேரி மகளிர் கல்லூரி, திருச்சி. இருவரும் மாணவிகளுக்கு தேவையான கருத்துக்களை, தங்களை உதாரணங்களாக காட்டி வாழ்க்கையில் எப்படி வெற்றி பெறுவது என்பதை பற்றி மிக அழகாக சிறப்புரை ஆற்றினார்கள். இந்த நிகழ்ச்சியில் 255 மாணவிகளும் பேராசிரியர்களும் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.



# முன்னாள் மாணவர் சங்கம்

நமது கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் 2022-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இச் சங்கத்தில் படித்து முடித்துச் சென்ற நமது கல்லூரியின் அனைத்துத் துறை முன்னாள் மாணவர்கள் ஆர்வத்துடன் ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினராகச் சேர்ந்து கல்லூரியின் வளர்ச்சிகுறித்த பல சிறப்பான வழி முறைகளை வழங்கி வருகின்றனர். மேலும் சங்க மாணவர்களின் எதிர்கால நலனைக் காப்பதே முக்கியமாகக் கொண்டுள்ளது.

மேலும் 2024-25 கல்வியாண்டிற்கான முன்னாள் மாணவர் சங்கம் விழா 21.07.2024 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைப்பெற்றது. இவ்விழாவில் முனைவர்.பி.டேவிட் லிவிங்ஸ்டன் (மாநில தலைவர் TNGCTA அகில இந்திய துணைத் தலைவர் AIFUCT ) அவர்கள் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் கல்லூரியின் அனைத்துத் துறை தலைவர்கள், பேராசிரியர்கள், கௌரவ விரிவுரையாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் இன்னாள், முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

நாள் : 18-03-25

இடம் : திருச்சி -22.

---

தலைவர்
முனைவர் திருமதி. **நா.ஆனந்தவல்லி**
M.A., M.Phil., B.Ed., Ph.D.,

துணைத்தலைவர்
திரு. **அ.அப்துல்குத்தூஸ்** B.A.,

பொதுச் செயலாளர் :
முனைவர் திரு. **க.நெப்போலியன்**
M.A., M.Phil., SET., Ph.D.,

துணைச் செயலாளர் :
மனிதநேயம் திரு. **நா.அன்பழகன்**
B.A., B.L.,

பொருளாளர்
திரு. **சீ.பழமலை** M.Com., M.Phil., Ph.D.,

மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் – OSA, GAC, Trichy-2.

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி மையம்
# ஆண்டறிக்கை 2024 - 25

வேலைவாய்ப்பு பயிற்சிமையமும், திருச்சிராப்பள்ளி மாவட்ட வேலைவாய்ப்பு மையமும் இணைந்து நம் கல்லூரி அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் TNPSC Group Exam Free Coaching நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு, இதற்கான துவக்கவிழா 12.08.2024 (திங்கள்கிழமை) அன்று நடைபெற்றது.

TNPSC Group Exam Free Coaching வகுப்புகள் 19.08.2024 முதல் நடைபெற்று கொண்டு இருக்கிறது. இரண்டாம் சுழற்சி மாணவர்களுக்கு மதியம் 12 மணி முதல் 1 மணி வரையிலும், முதல் சுழற்சி மாணவர்களுக்கு மதியம் 1 மணி முதல் 2 மணி வரையிலும் நடைபெற்றது. Even Semester-லும் 02.01.2025 முதல் TNPSC Group Exam Free Coaching வகுப்புகள் 21.03.2025 வரை நடைபெற்றது. இந்த வகுப்புகள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பயிற்சியாளர்களை கொண்டு நடத்தப்பட்டது. இந்த இலவச வகுப்பில் இளம்நிலை மாணவர்களும் முதுநிலை மாணவர்களும் பயனடைந்தார்கள்

வேலைவாய்ப்பு பயிற்சிமையமும், TIMESPRO Portal நிறுவனமும் இணைந்து நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சி 10.02.2025 அன்று அனைத்து (Shift I and Shift II) துறை மாணவர்களுக்கும் நடைபெற்றது. Learning for every Step of your Career என்ற தலைப்பில் Mr. NARENDRAN SD Program Manager அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

14.03.2025 வேலைவாய்ப்பு பயிற்சிமையத்தின் சார்பாக வளாக நேர்காணல் நடைபெற்றது. இந்த வளாக நேர்காணலில் 7 தனியார் கம்பெனிகள் கலந்து கொண்டனர்.

- **INDUSTRIAL RUBBER COMPANY**
- **GROVEMAN GLOBAL PVT LTD**
- **PULSE ELECTRONIC SYSTEMS INDIA PVT LTD**
- **MRF TYRES**
- **SRI INSTITUTE OF COMMERCE**
- **QUESS CORP**
- **EQUITAS BANKING**

GROVEMAN GLOBAL PVT LTD நிறுவனத்தில் 33 மாணவர்கள் தேர்வாகி 14.03.2025 அன்றே பணி ஆணை பெற்றார்கள்.

INDUSTRIAL RUBBER COMPANY மூலம் உற்பத்தி துறைக்கு 8 மாணவர்களும், அலுவலகப் பணிக்கு 8 மாணவிகளும் முதல் கட்ட தேர்வில் தேர்வுச் செய்யப்பட்டுள்ளார்கள்.

QUESS CORP – நிறுவனத்தின் சார்பாக 70 மாணவர்கள் முதல் கட்ட தேர்வில் தேர்வுச் செய்யப்பட்டுள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

22.03.2025 அன்று மூன்று துறைகளுக்கு (வேதியியல் துறை, இயற்பியல் துறை மற்றும் கணிதத் துறை). ITC Limited Viralimalai Puddukkotai நிறுவனத்தின் சார்பாக வளாக நேர்காணல் நடைபெற்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தக் கொள்கிறோம்.

---

## நூலகம்
## ஆண்டறிக்கை 2024 - 2025

College Library Provided One Day Internship programme for I MLib.I.Sc. Students of Department of Library and Information Science. Holy Cross College (Autonomous), Tiruchirappalli on 18/02/2025.They obtained Training in Library Software, Barcode Usage. Circulation Service. E Resources usages, Subject Gateways, Book Sorting and Library Maintenance.

# NATIONAL CADET CORPS
# ANNUAL REPORT 2024 - 25

- International Day of Yoga was Celebrated by Government Arts College, Trichy - 22 on June 21, 2024. All the NCC Cadets are participated and Learnt about the wisdom of Yoga.
- NCC Unit of Government Arts College Organized for The Campaign of "Har Ghar Tiranga". The Flags Made by the NCC Cadets were used in a Rally, held from Thuvakudi Residential Areas in the Afternoon of 14.08.2024. NCC Cadets visited each residence and distributed the Flags and also aware them to respect the National Flag.
- Our College NCC Unit has Organized a Webinar on "Naya Savera Scheme Drive Against De-Addiction of Drugs and Alcohol" on Augest 22, 2024. Dr. Sam Deva Asir Rm was Invited as Resource person. He Discussed Various Aspects of Drug Abuse Emphasizing prevention and how to seek professional help.
- The NCC Cadets of Government Arts College, Trichy -22 has Celebrated the Independence Day Parade on 15th August 2024 as a part of the 78th independence day of the Country. In Account of Independence day, our College NCC Unit Has Planted 50 Saplings Around the College Campus.
- NCC unit of Government Arts College, Trichy 22 organized 75th Anniversary Constitution Day celebrations on 26.11.24. All Cadets Were Participated and took the pledge of Preamble.
- The NCC Cadets of Government Arts College, Trichy -22 has celebrated the Rebublic Day on 26 January 2025 as a part of the 76th Rebublic day a flag are has been Created by our college NCC Cadets. All NCC Cadets are participated and Shown their special talents such as Silambam and Singing.
- Our College NCC Cadet SGT M. Vasantha Kumaar had participated in RDC Camp held at Delhi.
- Our College NCC Cadet M. Prasanth had Participated in MRDC held at Chennai.
- Our College NCC Cadet P. Sivapathi has attended EK BHARAT SHRESHTHA BHARAT - I CAMP at NCC Training Area, Idayapatti (Madurai) From 18 January 2025 to 29 January 2025 Conducted by 14 Bn Dindigul.

# IQAC ANNUAL REPORT 2024-2025

IQAC organised two events in the academic year 2024-25
3rd March 2025 IQAC and Counselling Cell organized one day seminar entitled "Save Children from Sexual Harassment"

In the seminar Mr. P. MOHAN, M.C.A., M.S.W., M.Sc. (Psy.), Chair Person, Child Welfare Committee, (Chief of 1st Class Judicial Magistrate) Trichy & Former State Member-TN Commission for Protection of Child Rights, Govt. of Tamilnadu., delivered a lecture on "Save Children from Sexual Harassment".

Dr. S. Umamatheswari, IQAC Coordinator, Associate Professor of Chemistry, Government Arts College, Tiruchirappalli - 22, welcomed the gathering. Dr. N. Ananthavalli, Principal (i/c), Government Arts College, Tiruchirappalli - 22, delivered Presidential address. Dr. P. Muralidharan, IQAC member, Assistant Professor, Department of Public Administration, Government Arts College, Tiruchirappalli 22, introduced the resource person. Dr. P. Bhagavathgeetha IQAC member, Associate Professor of Tamil, Government Arts College, Tiruchirappalli - 22, delivered vote of thanks. Around 200 participants (Head of the departments, faculty members, non- teaching staff and I UG students) were actively participated.

17th March 2025 IQAC organized one day workshop entitled "Research Methodology & Writing Research Articles" on.
In the workshop Dr. C. PARAMASIVAN Co-ordinator, Associate Professor & Research PG & Research Department of Commerce, Thanthai Periyar Government Arts & Science College (A), Tiruchirappalli, delivered a thought- provoking lecture on "Research Methodology and Writing Research Articles".

Dr. S. Umamatheswari, IQAC Coordinator, Associate Professor of Chemistry, Government Arts College, Tiruchirappalli - 22, welcomed the gathering. Dr. N. Ananthavalli, Principal (i/c), Government Arts College, Tiruchirappalli 22, delivered Presidential address. Dr. A. Faritha Asma, IQAC member, Assistant Professor, Department of Mathematics, Government Arts College, Tiruchirappalli - 22, introduced the resource person. Dr. P. Muralidharan, IQAC member, Assistant Professor, Department of Public Administration, Government Arts College, Tiruchirappalli - 22, delivered vote of thanks. Around 100 participants (Teaching staff, Research Scholars and PG students) were actively participated.

# குடி குடியைக் கெடுக்கும்

ஐந்து வயது அஞ்சலி அழுது கொண்டே அவள் அம்மா கூலி வேலை செய்யும் கட்டிடத்தை நோக்கி ஓடி கொண்டிருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் நிற்காமல் வந்து கொண்டிருந்தது. அஞ்சலி ஓடி வருவதைக் கண்ட அவளது தாய் அமுதா தலையில் சுமந்து கொண்டிருந்த சிமெண்ட் சட்டியை கீழே வைத்துவிட்டு தன் மகளை நோக்கி சென்றாள் . 'ஏட்டீ என்னடி ஆச்சி எதுக்கு இப்போ அழுதுட்டு வர ' என்று கேட்டாள். 'அம்மா ஆ அ அப்பா வந்து எ என்னோட கொ கொலுசப் புடுங்கிட்டு போய்ட்டுமா' என்று பாதி தேம்பலும் மீதி சொற்களுமாக அழுது கொண்டே சொன்னாள் அஞ்சலி

கூறுகெட்ட மனுசன் வீட்ல இருந்த பொருள தான் குடிச்சி அழிச்சான் இப்போ புள்ள கொலுசையும் குடிச்சி தீக்க எடுத்துட்டு போய் இருக்கான் பாவி' என்று நினைத்து கொண்டவள் அஞ்சலியைப் பார்த்து 'நீ வீட்டுக்கு போ அம்மா வந்து உனக்கு பணியாரம் செஞ்சு தரேன்' என்று அவளைச் சமாதானம் செய்து வீட்டுக்கு அனுப்பிவைத்தாள். அமுதாவின் கணவன் பாண்டியன் ஒரு அக்மார்க் குடிமகன். சேவல் கூவும் முன்பே சாராயக் கடையில் உட்கார்ந்திருப்பான். அமுதா தான் காலை வேளையில் கட்டிட வேலைக்கும் மாலைவேளையில் தள்ளுவண்டிக் கடையில் இட்லி வியாபாரமும் செய்து குடும்பத்தை நடத்தி வருகிறாள். வேலை முடிந்து வீட்டுக்கு வந்த அமுதா இரவு உணவு சமைத்துக் கொண்டிருந்தாள். அப்போது தான் சாராயக் கடையிலிருந்து வந்த பாண்டி அவளை பின்னாலிருந்து அணைக்க யோவ் விடுயா' என்று அவனைத் தள்ளிவிட்டவள் 'புள்ள கொலுசு எங்கயா? என்று கோபமாகக் கேட்டாள் 'அதுவா அது நம்ம சேட்டு கடைல இருக்கு' என்று சாவகாசமாகப் பதில் சொன்னவன் மீண்டும் அவளை நெருங்கி சென்று அணைக்க மீண்டும் பாண்டியைத் தள்ளிவிட்ட அமுதா 'எனக்கு கடைல வேலை இருக்கு நான் சீக்கிரமா போகணும் ராத்திரிக்குச் சமைச்சி வச்சிட்டேன்,

பாப்பா தூங்குறா அப்புறமா எழுப்பி சாப்பாட்ட குடு' என்று சொல்லிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினாள். அவள் செல்வதையே பார்த்து கொண்டிருந்தான் பாண்டியன். அவன் இப்போது முழு போதையில் இருந்தான். காம உணர்ச்சியின் பிடியில் இருந்த பாண்டிக்கு அந்த ஓலைக் குடிசையின் மூலையில் தன் உடலை ஒடுக்கி கொண்டு படுத்திருந்த அஞ்சலி கண்ணில் பட்டாள். அவள் உருண்டு படுத்ததில் அவள் பாவாடை தொடை வரை ஏறியிருக்க அவளை வக்கிர எண்ணத்தோடு பார்த்த பாண்டியன் அவளை நெருங்கி அவள் மேல் கைவைத்தான்...

இரவு வேலை முடித்து வீட்டிற்கு வந்த அமுதா அசதியில் நன்றாகத் தூங்கிவிட மறுநாள் காலை தாமதமாக எழுந்தாள். எழுந்ததும் பாண்டியனைத் தேடியவள் அவன் அங்கு இல்லாததைக் கண்டு சனியன் மறுபடியும் சாராயக் கடைக்கு போய்ட்டு போல' என்று நினைத்து கொண்டு வேலைக்குச் சென்றாள்.

அன்று மாலை பாண்டியன் வீட்டிற்கு வர அவனைப் பார்த்த அமுதாவிற்கும் அஞ்சலிக்கும் ஆச்சரியம் அவன் தள்ளாடாமல் நேராக நடந்து வந்தான் கையில் ஒரு பையுடன் வந்தவன் நேராக அஞ்சலியின் அருகே சென்றான் பையிலிருந்து அவளது கொலுசை எடுத்தவன் கீழே அமர்ந்து அவள் கால்களில் அதை அணிவித்தான். 'ஐஐஐ என் கொலுசு' என்று துள்ளி குதித்த அஞ்சலி அவனை இறுக்கக் கட்டிக்கொண்டாள். அவனைச் சந்தோசமாக பார்த்த அமுதா 'ஏதுய்யா உனக்குப் பணம் எப்படியா கொலுச மீட்ட' என்று கேட்டாள். வேலைக்குப் போனேன்டி அப்பறம் இனிமே சாராயக்கடை பக்கம் போக மாட்டேன் டி' என்று சொன்னான் அவனை உலகின் எட்டாவது அதிசயத்தை பார்ப்பது போல் பார்த்தாள் அமுதா.

'எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்குயா நீ குடிக்கிறத விட்டுட்டா மருவத்தூருக்கு நடந்து வரதா அந்த ஆதிபராசக்தி கிட்ட வேண்டி இருந்தேன் அந்த ஆத்தா கண்ணத் தொறந்துட்டா உன்ன திருத்திட்டா' என்று அமுதா சொல்ல 'என்ன சாமி திருத்தல அமுதா என் பொண்ணு தான் திருத்துனா'. என்று கூறியவன் நேற்று இரவு நடந்ததை நினைத்து பார்த்தான்.

அவன் அஞ்சலி மீது கை வைக்க அவன் கைபட்டதும் லேசாக கண்ணை விழித்து பார்த்த அஞ்சலி அப்பா ' என்று அவன் நெஞ்சில் தஞ்சம் புகுந்தாள். 'ஏன்ப்பா என் கொலுச எடுத்துட்டு போன' என்று கூறி தன் பிஞ்சு கைகளால் அவனை அடித்தவள் அவன் நெஞ்சில் சாய்ந்து உறங்கி போனாள்.

தன்னையே உரித்து வைத்தது போல் இருந்த தன் மகளைப் பார்த்த பாண்டியனுக்கு உணர்ச்சிகள் மொத்தமும் அடங்கிப் போனது. அவசரமாக வீட்டை விட்டு வெளியே வந்தவன் குடத்திலிருந்த தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டான். சொந்த மகளையே தவறாகப் பார்த்த தன்னையே அடித்துக் கொண்டவன் அங்கேயே அமர்ந்து கண்ணீர் சிந்தினான். இனிமேல் குடிக்கவே கூடாது என்று முடிவு எடுத்தவன் புது மனிதனாக மாறி எழுந்து சென்றான்.இனி அவர்கள் வாழ்க்கை சிறக்கும் என்று நாம் நம்பலாம்..

by
சு.பூர்ணி
இரண்டாம் ஆண்டு
இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல்

**Dr.V.NIVEDHA**
Guest lecturer
Department of Political Science



## கீழடி அகழ்வாராய்ச்சி கல்வி சுற்றுலா அனுபவம்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள கீழடி அருங்காட்சியகம், (சுமார் 600 கிமு - 300 கிபி) வளமான வரலாற்றை வெளிப்படுத்தும் கடந்த காலத்திற்கு ஒரு கண்கவர் சாளரமாகும். இந்த கல்விச் சுற்றுப்பயணம் மாணவர்களுக்குதமிழ் நாகரிகத்தின் நகர்ப்புறத் திட்டமிடல், வணிகத் தொடர்புகள் மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை ஆராய்வதற்கான தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. கடந்த காலத்திற்கு ஒரு பயணம், கீழடி என்பது பழங்கால குடியேற்றங்கள், செங்கல் கட்டமைப்புகள், மட்பாண்டங்கள் மற்றும் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தொல்பொருள் தளமாகும். இந்த கண்டுபிடிப்புகள் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நன்கு வளர்ந்த நாகரீகத்தை, கல்வியறிவு, வணிகம் மற்றும் நீர் மேலாண்மை ஆகியவற்றின் சான்றுகளுடன் சுட்டிக்காட்டுகின்றன.

**மாணவர்கள் என்ன கற்றுக்கொள்ளலாம்**

அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட வீடுகள், வடிகால் அமைப்புகள் மற்றும் செங்கல் கட்டமைப்புகள் ஆகியவை மாணவர்கள் காலத்தின் மேம்பட்ட நகர திட்டமிடலைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. மட்பாண்டங்களில் காணப்படும் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் பண்டைய தமிழ் சமூகத்தில் ஆரம்பகால கல்வியறிவு மற்றும் மொழி வளர்சியை பரிந்துரைக்கின்றன.

இந்த அருங்காட்சியகத்தில் கீழடியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட மட்பாண்டங்கள், டெரகோட்டா சிலைகள், மணிகள், சுழல் சுழல்கள் மற்றும் இரும்பு கருவிகள் உட்பட 15,000க்கும் மேற்பட்ட கலைப்பொருட்கள் உள்ளன. தந்தப்பொருட்கள், நாணயங்கள், நகைகள், டெரகோட்டா, மற்றும் அலங்கரிக்கப்பட்ட மட்பாண்டங்களின் இருப்பு வளமான கலை மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை குறிக்கிறது. பொருட்களின் கண்டுபிடிப்பு அக்கால வர்த்தக நடைமுறைகள் கைவினைத்திறன் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. கலைப்பொருட்கள் பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, மத நம்பிக்கைகள் மற்றும் கலை வெளிப்பாடுகளை பிரதிபலிக்கின்றன.

நெசவு கருவிகள் தொடர்பான கண்டுபிடிப்புகள் ஜவுளி உற்பத்தி ஒரு முக்கியமான தொழிலாக இருந்தது என்பதைக் குறிக்கிறது.

### சுற்றுலா சிறப்பம்சங்கள்

இந்த அருங்காட்சியகத்தில் 3D மாதிரிகள், டிஜிட்டல் திரைகள் மற்றும் மெய்நிகர்ரியாலிட்டி அனுபவங்கள் பண்டைய வாழ்க்கையை காட்சிப்படுத்த அனுமதிக்கிறது. கீழடி கலைப் பொருட்களைக் காட்சிப்படுத்தும் அருங்காட்சியகத்தைப் பார்வையிடவும். மட்பாண்டங்கள் செய்தல் மற்றும் கல்வெட்டு பகுப்பாய்வு போன்ற செயல்கள் செய்யவும் முடியும். கீழடிக்கான கல்விச் சுற்றுலா என்பது தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கடந்த காலத்துக்கான பயணமாகும். இது மாணவர்களின் வரலாற்று விழிப்புணர்வையும், பண்டைய நாகரிகங்கள் மீதான மதிப்பையும் அதிகரிக்கிறது. இது தமிழர் நாகரிகத்தின் வளமான மற்றும் தொடர்ச்சியான வரலாற்றின் சான்றாக நிற்கிறது. இது கற்றல் மற்றும் கண்டுபிடிப்புக்கான ஒரு அற்புதமான இடமாக அமைகிறது.

## "LOOK BEYOND YOUR HORIZON"

Look beyond your horizon. What do I mean by 'beyond your horizon? What on earth doer "horizon" actually mean? The word "horizon" refers to the limits you have for yourself. I want you to look beyond your limits. There's no point in doing stuff that you already know You you can do.

If want to achieve something great in your life, the you must try things you've never tried before. Only then will you know what you'ne Warn you, truly capable of. But chance you may many fail there's a times while trying.

But I want to let you know something sucess in isn't possible without Success proper knowledge about the thing you want to do. In order to gain Knowledge, you have to learn and by to learn, you have to fail and to fail, you have to time. In the long try.

Time in the long run a when You look back you will realize how for you've come. Whenever you try something new, either You Win on learn. It's all about your attitude. good luck. do your best.

Nancy Pricilla.X
IMA English

# இது காதல் 'அற்ற' காதல் கதை

மலர்கள் மலர்ந்துகொண்டே இருக்கின்றன!
மௌனமாய், மணமாய், அழகாய், மலர்ந்துக்கொண்டே இருக்கின்றன
அக்கினிப் பிழம்புச் சொற்கள்
அவற்றின் உரமாயின.
தீ நாக்கு மலர்களைச் சுடுவதில்லை.
அம்மலர்களின் துயரம் அவை பெற்ற
வடுக்கள் குறித்து அல்ல
மலர்களை முத்தமிட்டுச் செல்லும்
வண்ணத்துப்பூச்சிகளுடன்
கைகோர்த்துப் பறக்க விடாமல்
தடுக்கும் வேர்கள் குறித்துத் தான் .
வேர்கள் நீரை நாடிச்செல்கின்றன என
மலர்கள் அறியும்.
ஆனால் வேர்களின்றி மலர்களில்லையே !
அம்மலர்கள் மௌனமாய், மணமாய், அழகாய், மலர்ந்துகொண்டே இருக்கின்றன
வண்ணத்துப்பூச்சியின் அடுத்த தீண்டலை எதிர்பார்த்து.

முனைவர் **அ . பூரணி**
உதவிப்பேராசிரியர் காட்சித்தொடர்பியல் துறை

---

# பணத்தின் ஆதிக்கம்

கருவறையில் தொடங்கியது  பணத்தின் ஆளுமை
பல செருப்படிகளில் பதிந்தது பணத்தின் அருமை ...
உள்ளங்களால் உருவான உறவுகளும்
உரியடித்து வீசியது பணம்....
அய்யோ?... அத்தனை அவமானத்திற்கு
பிறகு பணம் என்ற ஆயுதத்தால் தாக்கப்பட்ட ஒரு
ஏழை போதும் என ஆயுள் முடித்த பிறகும்.. இந்த
மண்ணுக்கு என்னதா ஆசையோ எணமான உடலையும்
உண்பதற்கு ?... லஞ்சமாகப் பணத்தைக்  கேட்குறது....

**கிரிஜா.க**
II B.Com.,

# கல்லூரிக் காலங்கள்...

பள்ளிப் பருவம் முடிந்து
துள்ளித் திரிந்த நாட்கள்
ஜூன் மாத பூக்களாய்
கல்லூரி நந்தவனத்தில்
நுழைந்தோம் !!!

எங்களின் நான்கு ஆண்டுகள்
ஆயிரம் கனவுகளுடன்
மூடாத கதவுகளாய் திறந்திருந்தன!!!
எம் கால் சுவடுகளை
ஏற்க மறுக்காத படிகளும்!!!
வாசனைப் பூக்களை வருகையாய்
கொண்ட பசும் பலகையும்!!!

நண்பனின் முகம் பார்க்க
காத்திருக்கும் தூண்களும் !!!
HOD –ன் அதிர்வு கேட்டை
அசையாத மரங்களும் !!!
ஆசானும் அன்னையாய்
தெரிந்த வகுப்பறையும் !!!
கல்லூரியின் நூலகத்தையே
எட்டி பார்க்காத நாட்களும்!!!
எட்டிப் பார்த்து எழுதியும்
தேர்வில் தேராத மதிப்பெண்களும்!!!
தேர்வு முடிவிலும் தளராத நெஞ்சமும்!!

நண்பனின் சட்டையை
மாற்றித் திரிந்த நாட்களும்!!!
அழகி என்று பொய் சொன்னாலும்
அழகாய் ரசிக்கதோன்றிய நாட்கரும்!!

உணவினை ஊட்டி
அன்பினைப்பறிமாறிய
எங்கள் கல்லூரி கேண்டினும்!!!

படிப்பில் நடிப்பின்றி
நடிப்பையே படிப்பாக்கியே
எங்களின் நாடக மேடையும்!!

கல்லூரி சுற்றுலாவில்
சுழன்று வந்த மேகத்தை
சுட்டு விரலில் தொட்டு
வந்த நாட்களும் !!!

சண்டைகள் மட்டுமின்றி
எங்களின் சந்தோசங்களும்
கதை கதையாய் சொல்லும்
மரங்களும்!!!

வெள்ளைக் காகிதமாய் இருந்த
எங்களை
வண்ணக் கோலமாய்;
வானவில்லின் ஓர் அங்கமாய்
வரைந்தது எங்கள் கல்லூரியின்
வாசல்தான்...

கனவுகள் கலைந்தாலும்
எங்களின் கண்களில்
கல்லூரி காலங்கள் கலைவதில்லை...

இதுதான் இறைவன் கல்லூரிக்குக்
கொடுத்த வரமா....

K.YASOTHA
M.Com.,commerce
2nd year

# காலத்தைப் பொன் செய்

'காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது 'என்பது பொன்மொழி. காலத்தின் அருமை கருதி நாம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்டது தான் இந்த பொன்மொழி. ஒவ்வொரு ஆண்டும் பிறந்தநாள் கொண்டாடுபவர்கள் நம் வாழ்வில் மேலும் ஒரு வருடம் போய் விட்டது என்ற உண்மையை உணருவதில்லை. பணத்தைக் கொடுத்து இந்த உலகில் பலவற்றை விலைக்கு வாங்கலாம். ஆனால் கடந்து போன காலத்தை அதாவது நேரத்தை விலைக்கு வாங்க முடியுமா? சாதாரண மனிதன் முதல் குடியரசுத் தலைவர் வரை அனைவருக்கும் பொதுவானது நேரம் மட்டுமே. இன்று பயனுள்ள நிலையங்களும், நூலகங்களும் வந்துவிட்டன. இதெல்லாம் படிக்க நமக்கேது நேரம்? என்கிறோம். அதனை உருவாக்க அவர்களால் நேரம் ஒதுக்க முடியும் என்றால் அதனைப் பயன்படுத்த நம்மால் ஏன் நேரம் ஒதுக்க முடியவில்லை. படிக்காமலும் கேட்காமலும் செய்திகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாது. நேரம் கூர்மையான கத்தியைப் போல... நீ அதனை வெட்டவில்லை என்றால் அது உன்னை வெட்டிவிடும்..

நொடிப்பொழுது முதல் நாள், வாரம், மாதம், வருடம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும். நொடிப்பொழுதில் வாழ்க்கை இந்த இழந்தவர்களும், நொடிப்பொழுதில் வாழ்க்கை பிழைத்தவர்களும் இந்த உலகில் இருக்கின்றனர். ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றவரைக் கேட்டுப் பாருங்கள். ஒரு நொடி முந்தி வந்ததால் வெற்றி பெற்றேன் என்பார். அதனால் நேரத்தைச் சரியாக நிர்வாகம் செய்ய வேண்டும்.

பூமியில் பிறந்தது முதல் இறப்பது வரை உயிர்வாழும் அனைத்து நாட்களும் நல்ல நாட்களே. இன்று நல்ல நாள் இல்லை. நல்ல நேரம இல்லை, நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று எதற்காக நாம் செய்ய வேண்டியதை தள்ளி வைக்க வேண்டும். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்றால். நாளை மட்டும் இதை எப்படி செய்ய முடியும் செய்வதை இன்றேசெய். அதை திருந்தச்செய். இன்று, இப்பொழுது செய்யமுடியாத உன்னால் நாளை மட்டும் எப்படி செய்ய முடியும்.

முடியாது என்பது முட்டாள்களின் அகராதியில்தான் இருக்கும். என்னிடம் இல்லை என்றான் மாவீரன் நெப்போலியன்.

நீங்கள் சோம்பேரிகளா? இல்லை சாதிக்கப் பிறந்தவர்கள்

உயிரோடு இருப்பதால் பெருமை இல்லை, உயர்வோடு இருப்பதுதான் பெருமை

**K.யசோதா**

M.Com. II Year

எனது வாழ்க்கையின் வளர்ச்சியை
கண்டு பல கைகள் தட்டினாலும்.... உந்தன்
கைத்தட்லுக்கு ஈடாகுமா..
அப்பா

C.Sanjay B.Sc.,
II Viscom

---

வறண்டு பாலைவனமாக இருக்கும் என்னைத்
தண்ணீர் ஊற்றி செழிக்கச் செய்வாயா?

P.Aarthy B.Sc.,
II Viscom


---




காரணமில்லா சிறு சிறு
சண்டைகளுக்கு பின்னால்
ஒளிந்திருக்கிறது
அளவுகடந்த அன்பு
அண்ணன் தங்கை
உறவில்...♥...

S.Bavithra m.Com.,
II Year

---



காதலிப்பதை விட
அழகானது ஒருவரால்
காதலிக்கப்படுவது!
♥

S.Kaviya BCA.,
II Shift 2

# உயிர் எழுத்து

நினைத்ததோ வடகாசி வந்ததோ தென்காசி இடையிலோ சிவகாசி எல்லாமே சிவன் ஆசி இந்த வரிகளில் வரும் கடைசி 'சி' என்ற எழுத்து சிவபெருமானைக் குறிக்கிறது இதைபோல் "திருச்சிராப்பள்ளி" என்ற மாநகரின் ஊரில் 'சி' என்ற எழுத்து சிவ பெருமானைக் குறிக்கிறது. திரு என்ற சொல் அடைமொழி சொல்லாகும். அதாவது மேன்மைதங்கிய சிவபெருமான் உறையும் இடம் என்று பொருளைத் தருகிறது. அரிச்சந்திர புராணத்தில் அரிசந்திரனுக்குச் சாபத்தை நீக்கி சாப விமோட்சனம் தந்தார் சிவபெருமான்.

நளபுராணத்தில் நள மகாராஜாவுக்குச் சாபம் நீக்கி சாபவிமோட்சனம் கொடுத்தார் சிவபெருமான் பூமி தோன்றியதிலிருந்து இதே போல் நாம் நினைப்பதைப் போல் இந்த பூமியில் நிகழ்வுகள் நிகழ்வதில்லை மாறாக இந்த பூமி நினைப்பது போல் நம்மால் வாழ முடியவில்லை இதுதான் இயற்கை ஈசனின் உடன்படிக்கை என்று கூட எடுத்துக் கொள்ளலாம். மகாராஜக்களை மட்டும் அல்ல சாதார மனிதனைக் கூட சாபம் தாக்கும் ஊழ்வினை உறுத்தும் என்பார்கள் முன்னோர்கள் உண்மையும் அது தான்.

ஒரு மகன் பிறக்கும் போது அவன் தந்தை இறப்பதும் தந்தை இறக்கும் போது மகன் பிறப்பதும் சிவ பெருமானுக்கே உரித்தான நுண்ணிய செயலாகும். இந்த பூமி சுழல்வது ஒரு நியதி. இரவு பகல் மாறி மாறி வருவது ஒரு நியதி. இது ஒரு வினையால் (செயல்) முடிகிறது. புண்ணியமும் பாவமும் இறைவன் கணக்கில் சமமாக எடுத்துக் கொள்ள படுவதில்லை புண்ணியம் கூடுதலாகவும் பாவம் குறைவாகவும் இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட பாவக்கணக்கில் சாபமும் அடங்கும். அப்பாவக் கணக்கில் தான் ஒரு சாதாரண நிலையில் உள்ள ஒருவன் மாட்டிக்கொண்டான். சாபம் எங்கும் ஊடுநிவக் கூடியவை. கருவறைக்கும் தலைமுறைக்கும் ஊடுறுவக் கூடியவை.

சாபத்தால் அவனைப் பாம்பு ஒன்று தீண்டுகிறது. இதன் விளைவாக அவன் உடல் நிலை பாதிக்கப்படுதிறது. இறுதியில் அவன் இறந்து விடுவான் என்ற நிலையில் ஒரு நாள் இரவு 12.00 மணியளவில் உயிருடன் சுடு காட்டுக்கு நடந்து செல்கிறான். சுடுகாட்டு வாசலில் நுழையும் முன் எங்கிருந்தோ ஒரு மனிதஉருவம் வேலுடன் புலித்தோல் உடுத்தி உடுக்கையுடன் தோன்றுகிறது. அவர்தான் புலித்தோல் உடுத்திய சடையன், 'சிவ பெருமான்' அந்த சாதாரண மனிதனைப் பார்த்து ஏன் அப்பா இங்கு வருகிறாய்? திரும்ப வந்த வழியே செல்லப்பா என்று அழுத்தமாக உரைக்கிறார். அவன் திரும்பி சென்று விடுகிறான் அதன் பிறகு அவன் சிவ பெருமான் ஆசியால் 25- ஆவது ஆண்டில் எவ்வளவோ சோதனைகளும், வேதனைகளும் வந்த போதும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் அவன் முன்னோர்கள் 5 தலைமுறையாகச் செய்த சிவத் தொண்டு காரணமாகச சிவபெருமான் அவனைக் காப்பாற்றிருக்கிறார் சிவபெருமானால் பிறந்த பொழுது எழுதப்பட்ட எழுத்தை யாராலும் மாற்ற முடியாது' மாற்ற வேண்டுமானால், அது சிவபெருமானால் மட்டுமே முடியும். நன்றி.


இப்படிக்கு :
திரு. **N.ஜெய்சங்கர்**
உதவிப்பேராசிரியர், மின்னணுவியல் துறை




## விடா முயற்சி...

பயமும் தயக்கமும் உள்ளவர்களிடம்
தோல்வி வந்து கொண்டேதான் இருக்கும்.
பயத்தையும் தயக்கத்தையும் தூக்கிப் போடுங்கள்
வெற்றி உங்கள் காலடியில்
முயற்சி உனதானால்
வெற்றியும் உனதாகும்....


W.Mariya Roslin
II - M.Com - Commerce



எதிர்காலம் நிகழ்காலத்தின்
கண்ணாடியில் தெரிகிறது.



சின்ன சின்ன பூக்கள்
எல்லாம்!...
மலர்ந்து மணம் வீசுகிறது
இயற்கையின் அழகு!...
காண்போரை மகிழச்
செய்கிறது...

By
M.Mahalakshmi
II BCA 1st Shift

## வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி முகாம்









### ஆண்டு மலர் பொறுப்பாளர்கள்

**தமிழ்த் துறை**

முனைவர். **சா.சாலமன்** உதவிப் பேராசிரியர்

முனைவர். **க.முரளிதரன்** உதவிப் பேராசிரியர்

**ஆங்கிலத் துறை**

முனைவர். **ந.சு.விஜயலட்சுமி** இணைப் பேராசிரியர்

முனைவர். **ச.ஜெயந்திமாலா** இணைப் பேராசிரியர்



பட்டமளிப்பு விழா



விளையாட்டு விழா



ஆண்டு விழா

ஸ்ரீ அன்னம் பிரிண்டர்ஸ்,
திருச்சி-8.
செல் : 94869 29705